

சென்னை, ‘குறிஞ்சி’ இல்லத்தில் – கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தமது பிறந்த நாளில், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழியின் ஏற்பாட்டில் தயாரிக்கப்பட்டுள்ள “தி.மு.க. நாள்காட்டி –2025”–ஐ வெளியிட்டார். நூற்றாண்டு கண்ட திராவிட இயக்கத்தின் வரலாற்றையும், அவ்வரலாற்றில் சிறப்புமிக்க நாள்களையும் இளைஞர்களிடம் கொண்டு செல்லும் முன்னெடுப்பாகவும் – நீதிக்கட்சி – திராவிடர் கழகம் – திராவிட முன்னேற்றக் கழகத்தின் வரலாற்றில் இன்று வரையிலான முக்கியமான தலைவர்கள், மக்களுக்காக அவர்கள் முன்னெடுத்த போராட்டங்கள், தீர்மானங்கள், இயற்றப்பட்ட சமூகநீதிச் சட்டங்கள் ஆகிய வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வுகளை நினைவு கூரும் விதமாகவும் “தி.மு.க. நாள்காட்டி 2025” தயாரிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். இந்நாள் காட்டியை நெறிமுறைப்படுத்திய எழுத்தாளரும் – ‘தி.மு.க. ரைடர்ஸ்’ ஒருங்கிணைப்பாளருமான அ.ராஜா தமிழ் மாறன், கழக மாணவர் அணித் தலைவர் இரா. ராஜீவ் காந்தி ஆகியோர் இந்நாள் காட்டி வெளியீட்டின் போது உடனிருந்தார்கள்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (30.11.2024) பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மணலி சடையன்குப்பம் இருளர் காலனியில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண முகாமில் பொதுமக்களுக்கு அரிசி, பால், ரொட்டி, பாய் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை வழங்கினார். இந்நிகழ்வில் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் மாதவரம் எஸ்.சுதர்சனம், ஆர்.டி.சேகர், இ.பரந்தாமன், கே.பி.சங்கர், துணை மேயர் மு.மகேஷ் குமார், புழல் நாராயணன் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

### கேரள மாநிலம் – வைக்கம் பகுதியில் – ரூ.8.14 கோடி மதிப்பில்

# தந்தை பெரியார் நினைவகம் - நூலகக் கட்டிட இறுதிக் கட்டப் பணிகள்!

## தமிழ் வளர்ச்சி – செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேரில் பார்வையிட்டு ஆய்வு!

வைக்கம், டிச. 02 -

கேரளா மாநிலம், வைக்கத்தில் தந்தை பெரியார் நினைவகத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் ரூ.8.14கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் நினைவகம் மற்றும் நூலக கட்டிட இறுதி கட்டப் பணிகளை நேற்று முன்தினம் (30.11.2024) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது வைக்கம் நகராட்சி தலைவர் திருமதி. பிரிதா ராஜேஷ், துணை தலைவர் சுபாஷ், செய்தி மக்கள் தொடர்புத் துறை இணை இயக்குநர் (நினைவகம்) கு.தமிழ் செல்வராஜன், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர்கள் செல்வராஜு, மணியரசு (மின்), தமிழ்நாடு அரசின் கேரள மாநில தொடர்பு அலுவலர் ஆர்.உண்ணிகிருஷ்ணன், கோயம்புத்தூர் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ஆ. செந்தில் அண்ணா, உதவி செயற்பொறியாளர்கள் மோகனகிருஷ்ணன், கனகராஜ், உதவி பொறியாளர் ஜெயம்கொண்டான் ஆகியோர் உடனிருந்தனர்.

முதலமைச்சர் அவர்கள் கேரள மாநிலம் வைக்கத்தில் அமைந்துள்ள பெரியார் நினைவிடத்தை நவீனமுறையில் மறுசீரமைக்க வும், பெரியார் தொடர்பான நினைவுப் பொருட்கள் கூடுதலாக இடம் பெறுவதற்கும் ரூ.8.14 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிவித்தார்கள். அதன்படி, கேரள மாநிலம் கோட்டயம் மாவட்டம் வைக்கத்தில், வைக்கம் வீரர் தந்தை பெரியார் நினைவிடத்தை மேம்படுத்துதல் மற்றும் புதுப்பித்தல், ரூ.8.14/- கோடி கட்டுமான பணிக்கான நிர்வாக அனுமதியும், நிதி ஒதுக்கீடும் வழங்கப் பட்டது.

நினைவக அருங்காட்சியகம் 175.70 சதுர மீட்டர் பரப்பளவில் தரை மற்றும் முதல் தளம் விரிவாக்கம் செய்தல், ஏற்கனவே உள்ள பழைய நூலக கட்டடத்தினை இடித்து விட்டு அவ்விடத்தில் புதிய நூலக கட்டடம் அமைத்தல், தரை தளத்தில் 120 சதுர மீட்டர் பரப்பளவில் நூலகம் மற்றும் முதல் தளத்தில் 120 சதுர மீட்டர் பரப்பளவில் தங்கும் அறை என மொத்தம் 240 சதுர மீட்டர் பரப்பளவில் தரை மற்றும் முதல் தள கட்டடமாக அமைத்தல், சிறுவர் பூங்கா மறுசீரமைப்பு செய்தல், திறந்த வெளி அரங்கத்தில் (Amphi Theatre) சீரமைப்புப் பணிகள் செய்தல், ஏற்கனவே உள்ள சுற்றுப்புறச் சுவரினை பழமை மாறாமல் புதுப்பித்து, முன்புற முகப்பு நுழைவு வளைவு (Entrance Arch) அமைத்தல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அருங்காட்சியக கட்டிடத்தில் தந்தை பெரியாரின் வாழ்க்கை புகைப் படங்கள் இடம் பெற உள்ளது. சுமார் மூன்றாயிரம் (3000 Nos) புத்தகங்கள் கொண்டு பெரியார் நூலகம் அமையப் பெற உள்ளது.

அதனைத்தொடர்ந்து, நினைவகம் மற்றும் நூலக கட்டட இறுதிக்கட்ட பணிகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்கள் நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

### பெஞ்சல் புயல்: சென்னை – காஞ்சிபுரம் – திருவள்ளூர் – செங்கல்பட்டு மாவட்டங்களில் மின் கட்டணம் செலுத்துவதில் இடர்ப்பாடு!

# மின் கட்டணம் அபராதம் இன்றி செலுத்த - டிச.10 வரை கால நீட்டிப்பு!

## மின்துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி அறிவிப்பு!

சென்னை, டிச.2-

பெஞ்சல் புயல் காரணமாக சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் உள்ள மின் நுகர்வோர்களுக்கு மின் கட்டணம் செலுத்துவதில் ஏற்பட்டுள்ள இடர்ப்பாடுகளை கருத்தில் கொண்டு மின்கட்டணத்தை அபராதத் தொகை இல்லாமல் செலுத்த டிசம்பர் 10ம் தேதி வரை காலநீட்டிப்பு வழங்கப்படுகிறது என மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி அறிவித்துள்ளார்.

அவரது அறிவிப்பு வருமாறு :-

தமிழ்நாட்டில் வங்கக்கடலில் நிலை கொண்ட காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் பெஞ்சல் புயலாக வலுவெடுத்து சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் பெய்துவரும் கனமழை மற்றும் புயல் காற்றின் காரணமாக ஏற்பட்டுள்ள பாதிப்புகளைத் தொடர்ந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, அரசு பல்வேறு மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு வருகிறது.

இந்நிலையில், மின்கட்டணம் செலுத்துவதில் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் உள்ள மின்நுகர்வோர்களுக்கு ஏற்பட்டுள்ள இடர்பாடுகளை கருத்தில் கொண்டு, 30.11.2024 முதல் 09.12.2024 வரை மின் கட்டணம் மற்றும் இதர நிலுவைத் தொகையினை செலுத்த வேண்டிய மின்நுகர்வோர்கள் அபராதத் தொகை இல்லாமல் 10.12.2024 வரை செலுத்த காலநீட்டிப்பு அளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருச்செங்கோடு நகராட்சி பணியாளர்களுக்கு உணவு!

## நகர மன்றத் தலைவர் வழங்கினார்!

நாமக்கல், டிச. 2–

நாமக்கல் மேற்கு மாவட்டம் திருச்செங்கோட்டில் தமிழ்நாடு துணை முதல்வர் தி.மு.க. கழக இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாவட்டச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் ஆலோசனையின்படி, திருச்செங்கோடு நகராட்சியில் பணிபுரியும் 300 க்கும் மேற்பட்ட அனைத்து பணியாளர்களுக்கும் நகர மன்ற தலைவர் நளினி சுரேஷ்பாபு பிரியாணி உணவு வழங்கி, அவர்களுடன் அமர்ந்து மதிய உணவு அருந்தினார்.

தொடர்ந்து புதிய பேருந்து நிலையம் பேருந்து நிலைய ஆட்டோ ஸ்டாண்ட் பகுதிகளில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.நடேசன், நகர் மன்ற தலைவர் நளினி சுரேஷ்பாபு ஆகியோர் தலைமையில் பட்டாசு வெடித்து இனிப்புகள் வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் நகர மன்ற உறுப்பினர்கள் மாதேஸ்வரன், செல்வி, ராஜவேல் புவனேஸ்வரி, உலகநாதன், திவ்யா வெங்கடேஸ்வரன், தாமரைச் செல்வி மணிகண்டன், ரமேஷ், சினேகா ஹரிகரன், செல்லம்மாள் தேவராஜன், சுரேஷ்குமார் மற்றும் நகர கழக நிர்வாகிகள் கணபதி, ராஜவேல், பெருமாள், சுரேஷ்குமார், தூய்மை பணியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி விழுப்புரம் பேரிடர் மேலாண்மை கட்டுப்பாட்டு அறையில் ஆய்வு மேற்கொண்டு பொதுமக்களின் கோரிக்கைகளை தொலைப்பேசி மூலம் கேட்டறிந்தார். சட்டமன்ற உறுப்பினர்கள் அன்னியூர் அ.சிவா, டாக்டர் இரா இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செபுஷ்பராஜ், மாவட்ட துணைச் செயலாளர் தயா.இளந்திரையன், நகரச் செயலாளர் இரா.சக்கரை , நகர மன்ற தலைவர் தமிழ்ச்செல்வி பிரபு, துணைத் தலைவர் சித்திக்அலி மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் (பொது), கோட்டாட்சியர் முருகேசன், நகராட்சி ஆணையர் வீரமுத்து குமரன், வட்டாட்சியர் கனிமொழி, மின்துறை அதிகாரிகள், அரசு அதிகாரிகள், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ப.அன்பரசு மாணவர் அணி விக்ரமன், தென்னமாதேவி சூர்யா உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.



ஈரோடு பிரப் ரோட்டில் மழைக் காலங்களில் தண்ணீர் தேங்கி போக்குவரத்துக்கு இடையூறாகவும், வணிக நிறுவனங்களுக்கு பொதுமக்கள் செல்ல முடியாத நிலையும் உள்ளத்தால் அந்தப் பகுதி வியாபாரிகள் தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை அமைச்சர் சு.முத்துசாமியிடம் இந்தக் குறையை நிவர்த்தி செய்து தருமாறு கோரிக்கை விடுத்தனர். கோரிக்கையை பெற்றுக்கொண்ட அமைச்சர் பாதிக்கப்பட்ட இடத்திற்கு நேரடியாகச் சென்று ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் மற்றும் நெடுஞ்சாலை துறை அதிகாரிகளுடன் பார்வையிட்டு உடனடியாக சரி செய்யுமாறு கூறினார்.



கேரள மாநிலம் கோட்டயம் மாவட்டம் வைக்கம் பகுதியில் அமையப்பெற்றுள்ள தந்தை பெரியார் நினைவகத்தில் நேற்று முன்தினம் (30.11.2024| தமிழ்நாடு அரசின் சார்பில் ரூ.8.14 கோடி மதிப்பில் கட்டப்பட்டு வரும் நினைவகம் மற்றும் நூலக கட்டிட இறுதிகட்ட பணிகளை, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அருகில் இணை இயக்குனர் (நினைவகங்கள்) தமிழ் செல்வராஜன், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் செல்வராஜ், கோயம்புத்தூர் மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத் அலுவலர் ஆ.செந்தில் அண்ணா, தமிழ்நாடு அரசின் கேரள மாநில தொடர்பு அலுவலர் ஆர்.உண்ணிகிருஷ்னன் ஆகியோர் உள்ளனர்.



தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக தலைமை அலுவலகத்தில் செயல்பட்டுவரும் 24 மணி நேர மின் நுகர்வோர் சேவை மையமான மின்னகத்தில் மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்ததீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி பெஞ்சல் புயல் காரணமாக பெய்து வரும் கனமழை மற்றும் தீவிர புயல் காற்றினால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் மற்றும் புகார் அழைப்புகள் குறித்து ஆய்வு மேற்கொண்டர். உடன் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் க.நந்தகுமார், மேலாண்மை இயக்குனர் (பசுமை எரிசக்தி) டாக்டர்.அனீஸ் சேகர், இயக்குனர் (பகிர்மானம்) அ.ரா.மாஸ்கரனஸ் மற்றும் உயர் அலுவலர்கள் உள்ளனர்.